அசல் வழக்கு எண்:61/2022

DEPOSITION OF WITNESS: P.W.2

| | |
|---|---|
| பெயர் | சந்திரபாபு |
| கணவர் பெயர் | குப்ப கவுண்டர் |
| வயது | 73 |
| கிராமம் | மன்சுராபாத் |
| வட்டம் | சேத்பட் |
| தொழில் | விவசாயம் |

The Witness sweared under Oaths Act 1969 on this the day of 01st day of June 2026

**முதல்விசாரணை**

நான் இவ்வழக்கில் 3ம் நபராவேன். எனது நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். ஆவணங்கள் ஏதும் இல்லை.

**குறுக்கு விசாரணை -**

என்னுடைய சொந்த ஊர் காட்டுத்தெள்ளூர், சேத்பட் தாலுக்கா என்றால் சரிதான். எனக்கு எழுத படிக்க தெரியாது. நான் தற்போது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை என்னிடம் படித்து காட்டினார்கள். அதனால் அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். 2ம் பிரதிவாதி சுள்ளி எங்கள் ஊரை சேர்ந்தவர் என்றால் சரிதான். அவரது அம்மா எல்லம்மாளும் அதே ஊரை சேர்ந்தவர்தான். எல்லம்மாள் கணவர் பெயர் எத்திராஜ் ஆகும் அவர் ராந்தம் கிராமத்தை சேர்ந்தவர். எத்திராஜிக்கு இரண்டு மனைவிகள் ஆவர். அதில் எல்லாம்மாளை எனக்கு தெரியும் மற்றொருவர் யார் என்று எனக்கு தெரியாது. இரண்டாவது மனைவிக்கு ஒரு மகன் உள்ளார். அவர் பெயர் எனக்கு தெரியாது. இந்த வழக்கு எல்லம்மாள் தாக்கல் செய்துள்ளார். அவர்கள் தரப்பில் நான் சாட்சி சொல்ல வந்துள்ளேன். நான் சாட்சி கையெழுத்து போட்டதாக சொல்லப்படும் வா.சா.ஆ.15ல் என்ன எழுதி இருந்தது என்று எனக்கு தெரியும். அந்த ஆவணம் மூலம் எத்திராஜ் கவுண்டர் தனது நிலங்களை எல்லம்மாளுக்கு எழுதி வைப்பதாக தெரிவித்தார். அந்த ஆவணத்தில் எந்த சர்வே எண் நிலங்கள் கட்டுப்பட்டுள்ளன என எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த நிலம் எல்லமாளுக்கு எழுதி கொடுக்கப்பட்ட பின்னர் அது சம்மந்தமாக பின்னர் என்ன நடந்தது

என எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்ந வழக்கை யார் என்ன சர்வே நெம்பர் நிலங்கள் சம்மந்தமாக தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. இந்த வழக்கு சொத்துக்கள் எல்லம்மாள் பெயரில் பட்டா மாறுதல் செய்யப்பட்ட விவரங்கள் அவர் சொல்லி தான் எனக்கு தெரியவந்தது என்றால் சரிதான். 24.01.2012ம் தேதி ஏற்பட்ட வா.சா.ஆ.16 தான செட்டில்மெண்ட் பத்திரம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றும் அதில் நான் சாட்சி கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்து சம்மந்தமாக வேறு ஏதேனும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எல்லம்மாள் எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது. அவர் அப்போது தனது மகளுடன் தான் இருந்தார். இந்த வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி சுள்ளி கேட்டுக்கொண்டதன் பேரில் அவருக்கு ஆதரவாக வழக்கில் பொய் சாட்சி சொல்கிறேன் என்றும் அதனால் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளதக்கது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்<br><br>Sd/- S. Senthil Babu<br>சார்பு நீதிபதி,<br>போளூர். |